(v) இராஜபாளையம் ஜானகிராம் ஸ்பின்னிங் மில் தொழிலாளர் களுக்குச் சம்பளம், உணவு ரேஷன் அளிக்கப்படாமை

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 42-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியத் துவமும் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கையை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்:—

"இராஜபாளையம் ஜானகிராம் ஸ்பின்னிங் மில்லில் தொழி லாளர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யாமலும், உணவு ரேஷன் போடாமலும் சுமார் 300 தொழிலாளர்களின் குடும்பங் களின் நிலை."

அதிகாரிகள் தலையிட்டுச் சொல்லியும்கூட அவர்கள் கேட்க வில்லை. கண்டிப்பான முறையில் நிர்வாகத்தினர் வற்புறுத்தியும் கூட சாதாரண நிர்வாகத்திற்குப் புறம்பாக இப்பேர்ப்பட்ட நிலைமை இருப்பதால் இந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்க இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் ஆதலால் அனுமதி மறுக்கப் படுகிறது.

(vi) சென்னை மருத்துவக் கல்லூரி விடுதியில் ஏற்பட்ட சேதம், நட்டம், கால்நடைக் கல்லூரி, சி.என்.டி. இன்ஸ்டிட்யூட் இவற்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு

Dr. H. V. Hande: Sir, I move—

"That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the damage and loss of property to the Madras Medical College (Men's) Hostel and the shooting that took place in the Veterinary College Hostel and C.N.T. Institute at Vepery on 26th March 1968". The whole tragedy is in the Madras Medical College Hostel. The students were absolutely unconnected with the episode. They were living normally. But unfortunately some people came and stayed outside the Hostel. They wanted to take violent action. This was exactly at 10-45 p.m. on 25th March 1968. Buses were mobilised before the hostel students. At 11 p.m. pelting of stones started and two boys were injured. The Police arrived at 11-40 p.m. At that time the strength of the crowd outside the Hostel was only one hundred and in my opinion they could have been easily dispersed. At 12-30 a.m. four students returned from a late show and these were simply beaten. All their clothes were removed and burnt. In the meantime the Sub-Inspector made them get into the Police van and were admitted into the hospital. Between 2 a.m. and 5 a.m. the buses started moving out. We do not know wherefrom they came. At 5-30 a.m. there was sudden pelting of stones. They mobilised all their resources and the buses barricaded the entire area. What the C.I.D. were doing passes my comprehension. The people